# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

Under Section 173 BNSS

C 8129867

1. District : திருவாரூர் PS: VEAC Year: 2025 FIR No.: 4 Date: 2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 106

(ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended 2018 Sections பிரிவுகள்: 7(a), 7A r/w 12

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : D/O Date to : 15-10-2025
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 16.00Hrs - 23.30Hrs

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Com Time : 16.10.2025 - 09.00Hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) FIR Time : 16.10.2025 - 10.00Hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கிணியில் டைப் செய்யப்பட்ட புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : நகராட்சி அலுவலகம் மன்னார்குடி
முறைக் காவல் எண் முகவரி 30 Km மேற்கு

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : N.G.M. நேரு கேசரன் (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர் திருமலை

(c) Date / Year of Birth : 5/01/2025 (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : முதுநிலை அரசாய் அலுவலர் (g) Address : அலுவலகம் அலுவலர்
தொழில் முகவரி மாவட்ட அலுவலகம் திருவாரூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

எதிரிகளின் பெயரில் நேரடியாக கிணைக்கப்படவில்லை

5/01/2025

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

இன்று 16.10.2025ஆம் தேதி திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் காவல் ஆய்வாளர் திருமதி.G.R.சித்ரா ஆகிய நான் பணியில் இருந்த போது தஞ்சாவூர் ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.M.குணசேகரன் என்பவர் கொடுத்த புகாரை பெற்று வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு அனுப்புநர் : திரு.M. குணசேகரன், த/பெ.முத்துக்குமரன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர். பெறுநர் : காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். அய்யா, 15.10.2025-ந் தேதி திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகராட்சி அலுவலகத்தில் வரி செலுத்துவது, சொத்துவரி, குடிநீர் வரி, தொழில்வரி, காலிமனை வரி மற்றும் NOC பெறுவது மற்றும் இதர பணிகளுக்காக நகராட்சி அலுவலகத்திற்கு வரும் பொது மக்களிடம் நகராட்சி ஊழியர்கள் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கையூட்டு பெறுவதாக கிடைத்த தகவலின் பேரில் தஞ்சாவூர் மாவட்ட ஆய்வு குழு ஆய்வாளர் திரு.மு.குணசேகரன் ஆகிய நான் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் சென்று தகவல் தெரிவித்தும்,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பனியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

16-10-2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

16/10/2025

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G.R.CHITRA
Rank: நிலை Inspector of Police No. எண்.....
VEAC Thiruvarur

மன்னர்குடி நகராட்சி அலுவலகத்தை திடீர் சோதனை மேற்கொள்வதற்காக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினருடன் 15.10.2025ஆம் தேதி 14.00 மணியளவில் புறப்பட்டு மன்னார்குடி நகராட்சி அலுவலகத்திற்கு மாலை 16.00 மணிக்கு சென்று 16.00 மணியிலிருந்து 23.30 மணிவரை மன்னார்குடி நகராட்சி அலுவலகத்தின் பொது பிரிவு, சுகாதாரபிரிவு, பொறியியல் மற்றும் வருவாய் பிரிவில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட திடீர் சோதனையில் 1) திரு.மீராமன்சூர், நகராட்சி மேலாளரிடருந்து ரூ.33,200/-ம், 2) திருமதி.உமாவதி, காசாளரிடமிருந்து ரூ.9,400/-, 3) திரு.விஜயகுமார், உதவியளரிடமிருந்து ரூ.4,100/-, 4) திரு.மணிகண்ணன், கிளர்க்கிடமிருந்து ரூ.5,000/-, 5) திருமதி.பூங்கொடி, E1 Section தற்காலிக பணியாளரிடமிருந்து ரூ.10,000/-, 6) திருமதி.விஜயலெட்சுமி, வருவாய் உதவியாளரிடமிருந்து ரூ.4,100/-, 7) திருமதி.சுமதி, வருவாய் உதவியாளரிடமிருந்து ரூ.2,200/-, 8) திரு.முருகன், இளநிலை உதவியாளரிடமிருந்து ரூ.2,100/-, 9) திரு.அரசுமணி, தற்காலிக பணியாளரிடமிருந்து ரூ.5,300/- 10) திரு.மாரிமுத்துராஜன் (தனிநபர்) என்பவரிடமிருந்து ரூ.48,000/-, 11) திரு.கோவிந்தராஜ் (தனிநபர்) என்பவரிடமிருந்து ரூ.8,100/-, ஆக கூடுதல் ரூ.1,31,500/-ம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கடைகள் மற்றும் பொது மக்களிடமிருந்து வசூல் செய்த கணக்கில் வராத தொகை என மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் மன்னார்குடி நகராட்சியின் 15.10.2025ஆம் தேதி வரவு செலவு கணக்குகளை ஆய்வு செய்ததில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசூல் செய்யப்பட்ட வரித் தொகையினை அரசு கணக்கில் செலுத்தாமல் ரூ.1,54,993/- கையாடல் செய்யப்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளது. மன்னார்குடி நகராட்சியில் பராமரிக்கப்பட்ட 2025-26ஆம் ஆண்டிற்கான டெப்பாசிட் ரிஜிஸ்டர், 15.10.2025-ஆம் தேதி போடப்பட்ட 0246885 முதல் 0246940 வரையிலான பற்றுச்சீட்டுகள், மன்னார்குடி நகராட்சியில் பராமரிக்கப்பட்ட செக் / டிடி Received Register-ம், வருகை பதிவேடும் கைப்பற்றப்பட்டது. மன்னார்குடி நகராட்சி அலுவலகத்தில் கணக்கில் வராத ரூ.1,31,500/- தொகை கைப்பற்றப்பட்டது தொடர்பாக 1) திரு.மீராமன்சூர், நகராட்சி மேலாளர், 2) திருமதி.உமாவதி, காசாளர், 3) திரு.விஜயகுமார், உதவியளர், 4) திரு.மணிகண்ணன், கிளர்க், 5) திருமதி.பூங்கொடி, E1 Section தற்காலிக பணியாளர், 6) திருமதி.விஜயலெட்சுமி, வருவாய் உதவியாளர், 7) திருமதி.சுமதி, வருவாய் உதவியாளர், 8) திரு.முருகன், இளநிலை உதவியாளர், 9) திரு.அரசுமணி, தற்காலிக பணியாளர், 10) திரு.மாரிமுத்துராஜன் (தனிநபர்), 11) திரு.கோவிந்தராஜ் (தனிநபர்) ஆகியோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் திரு.மீராமன்சூர், நகராட்சி மேலாளர், திருமதி.உமாவதி, காசாளர், திருமதி.விஜயலெட்சுமி, வருவாய் உதவியாளர், திருமதி.சுமதி, வருவாய் உதவியாளர், திரு.மாரிமுத்துராஜன் (தனிநபர்), திரு.கோவிந்தராஜ் (தனிநபர்), திரு.குமரேசன், திருமதி.அகல்யா, வருவாய் உதவியாளர் ஆகியோரிடம் பெற்ற வாக்குமூலங்களை இத்துடன் இணைத்து தக்க நடவடிக்கைக்காக அனுப்பியுள்ளேன். Sd (XXXXXXX) (M.GUNASEKARAN) Cell Inspector, District Inspection Cell Office, Thanjavur. Sir, Received the complaint and registered a case in

Thiruvarur V&AC Crime No. 4/2025 U/s 106 BNSS and 7(a), 7A r/w 12 of PC Act 1988 as amended 2018 on 16.10.2025 at 10.00 Hrs Sd (XXXXXXX)16/10/2023. (G.R.Chitra, Inspector of Police, V&AC, Thiruvarur) திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர். இன்று 15.10.2025-ஆம் தேதி திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகராட்சி அலுவலகத்தில் வரி செலுத்துவது, சொத்துவரி, குடிநீர் வரி, தொழில்வரி, காலிமனை வரி மற்றும் NOC பெறுவது மற்றும் இதர பணிகளுக்காக நகராட்சி அலுவலகத்திற்கு வரும் பொது மக்களிடம் நகராட்சி ஊழியர்கள் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கையூட்டு வாங்குவதாக தஞ்சாவூர் ஆய்வு குழு ஆய்வாளர் திரு.மு.குணசேகரன் ஆகிய எனக்கு காலை 11.00 மணியளவில் கிடைத்த தகவலை, திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து, திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினருடன் மன்னார்குடி நகராட்சி அலுவலகத்திற்கு 16.00 மணியளவில் வந்தும், திடீர்சோதனை மேற்கொண்டதற்கான நடவடிக்கை விவரம். இந்த திடீர் சோதனை குழுவில் இருந்த அலுவலர்கள் விவரம்: 1. திரு.மு.குணசேகரன், வயது 51/2025, த/பெ முத்துக்குமரன், ஆய்வு குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம் தஞ்சாவூர். 2. திருமதி.G.R.சித்ரா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். மேற்படி மன்னார்குடி நகராட்சி அலுவலகமானது வடக்கு பார்த்தவாறு வாசல் அமைந்துள்ளது. அலுவலக மெயின் கேட்டின் உள்ளே நுழைந்த உடன் மெயின் பில்டிங், அதன் வலது புறத்தில் தரைதளம் (சுகாதார பிரிவு) மற்றும் முதல் தளத்துடன் (பொது பிரிவு) கூடிய கட்டிடமான அமைந்துள்ளது . மன்னார்குடி நகராட்சி அலுவலக ஆணையர் குறித்து விசாரிக்க தற்சமயம் பணியிடம் காலியாக இருப்பதால் திருவாரூர் நகராட்சி ஆணையர் திரு.சுரேந்தரஷா என்பவர் கூடுதல் பொறுப்பு பார்த்து வருகிறார், அலுவலகத்தின் மேலாளராக திரு.மீராமன்சூரும், காசாளர் திருமதி.உமாவதியும் ஆஜரில் இருந்தனர். மேற்படி திடீர் சோதனை குழுவினர் 16.10 மணியளவில் மன்னார்குடி நகராட்சி அலுவலகத்தின் தரைதளத்தில் இருந்த சுகாதார பிரிவு அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டபோது ஆஜரில் இருந்தவர்கள் விவரம். 1. திரு. V.தமிழ்ச்செல்வம் வயது 51/2025, த/பெ வீரபாண்டியன், சுகாதார அலுவலர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 2. திருமதி.பிரேமலதா வயது 42/2025, க/பெ கண்ணன், களப்பணி உதவியாளர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 3. திருமதி.தனலெட்சுமி வயது 32/2025, க/பெ சரத்குமார், கணினி ஆப்பரேட்டர், (DBC) public health, நகராட்சி அலுவலகம், மன்னார்குடி, 4. திருமதி.க.உமாவதி வயது 37/2025, க/பெ கமலநாதன், இளநிலை உதவியாளர், வரி வசூல் மையம், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. மன்னார்குடி நகராட்சி அலுவலகத்தின் தரைதளத்தில் இருந்த சுகாதார பிரிவு அலுவலகத்தில் ஆஜரில் இருந்த திரு.தமிழ்ச்செல்வம், த/பெ வீரபாண்டியன், திருமதி.பிரேமலதா, க/பெ கண்ணன், திருமதி.தனலெட்சுமி, க/பெ சரத்குமார் ஆகியோரை சோதனை செய்ய அவர்களிடமிருந்து பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. மேலும் ஆஜரில் இருந்த திருமதி.உமாவதி, க/பெ கமலநாதன், காசாளர் அறையை

சோதனை செய்த போது அவர் அமர்ந்திருந்த இருக்கையின் முன்புறம் இருந்த வலது டேபில் மேல் டிராயரில் இருந்த பிளாஸ்டிக் டப்பாவில் தலா ரு.4,700/- வீதம் இரண்டு கட்டுகள் ரப்பர் சுற்றப்பட்டு இருந்தது. இது குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, தண்ணீர் வரி செலுத்துவதற்கான டெப்பாசிட் தொகை என்று தெரிவித்தார். அதற்குரிய வரியுடன் சேர்த்து செலுத்துவதற்கு வைத்திருந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய காரணம் ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லை, தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வசூல் செய்த தொகை என்ற சந்தேகத்தின் பேரில் ரு.9,400/- (500x18= 9000, 100x4=400) மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் இன்றைய வரவு செலவு குறித்த கேட்க, 15.10.2025-ஆம் தேதி ரொக்க பதிவேட்டின்படி நகராட்சியில் வீட்டு வரி, தண்ணீர் வரி, தொழில் வரி, கடை வாடகை, காலி மனைவரி தொடர்பாக வரவு வைக்கப்பட்ட தொகை ரு.1,86,713/-ஆக இருந்தது. காசாளரிடம் தொகை ஆஜர் படுத்துமாறு கூற அவர், ரு.31,720/- மட்டுமே ஆஜர் படுத்தினார். மீதத்தொகை ரு.1,54,993/- குறித்து கேட்க பில் கலெக்டெர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் பணம் செலுத்தாமலேயே பில் போட்டு கொடுத்ததாகவும், இனிமேல் தான் வரித்தொகையை வசூல் செய்து கொண்டு வந்து கொடுப்பார்கள் என்று தெரிவித்தார். பில் கலெக்டெர்கள் திருமதி. சுமதி என்பவருக்கு ரு.9,108/- க்கும், திரு. குமரேசன் (ஓய்வு பெற்ற Fountain Cleaner) என்பவருக்கு ரு.24018/- கும் 15.10.2025-ல் பில் கொடுத்தேன் என்றும், மற்ற பில் கலெக்டர்கள் முகேஷ், அகல்யா, இராமநாதன், Special RI சிங்காரவேல், E1 ஜோதி மேடம், வருவாய் உதவியாளர் விஜயலெட்சுமி, பில் கலெக்டர் மணிகண்டன் ஆகியோரிடமிருந்து பழைய பில்களுக்கான வரி தொகை வரவேண்டும் என்றும் தெரிவித்தார். இது குறித்து அலுவலகத்தில் ஆஜரில் இருந்த பில்கலெக்டர் சுமதி என்பவரை விசாரிக்க பில் பெற்றுக் கொண்டேன் இனிமேல்தான் வரி வசூல் செய்து தொகை கொடுப்பேன் என்று கூறினார். பில்கள் குறித்து கேட்க சந்மந்தப்பட்ட நபர்களிடம ஒப்படைத்துவிட்டதாக தெரிவித்தார். பில் கலெக்டர் திருமதி.அகல்யாவை விசாரிக்க 15.10.2025-ல் தான் பில் ஏதும் கேட்டு பெறவில்லை என்றும், மேலாளர், நகர்மன்ற தலைவர் திரு.சோழராஜன் என்பவரின் வீட்டிற்கு கட்ட வேண்டிய வரித் தொகையான ரு.9,365/-ஐ காசாளரிடம் தானே கொடுத்து விடுவதாகவும், பில்லை மட்டும் பெற்றுவந்து தன்னிடம் கொடுக்குமாறு கூறியதால் அன்றைய தினமே காசாளரிடம் பில்லை பெற்று வந்து மேலாளர் திரு.மீராமன்சூரிடம் கொடுத்து விட்டதாக தெரிவித்தார். திருமதி.விஜயலெட்சுமியை விசாரிக்க 15.10.2025-ல் தான் பில் ஏதும் கேட்டு பெறவில்லை என்று தெரிவித்தார். காசாளரும், பில் கலெக்டர்களும், மேலாளரும் முன்னுக்குப்பின் முரணான தகவல்களை தெரிவித்தனர். நகராட்சியில் வீட்டு வரி, தண்ணீர் வரி, தொழில் வரி, கடை வாடகை, காலி மனைவரி தொடர்பாக சம்மந்தப்பட்ட நபர்களிடம் வரியினை வசூல் செய்து வந்து நகராட்சியில் செலுத்தி பில் பெற்று சம்மந்தப்பட்ட நபர்களுக்கு வழங்க வேண்டும் அல்லது வரி செலுத்துபவர்கள் நேரடியாக நகராட்சி அலுவலகம் வந்து வரியினை செலுத்தி பில் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு வரி செலுத்த தவறியவர்களுக்கு நகராட்சியில் இருந்து நோட்டீஸ் அனுப்பப்பட்டு வரிவசூல் செய்யப்படும். ஆனால் மன்னார்குடி நகராட்சியில் பொதுமக்களிடமிருந்து வரிகளை வசூலிக்காமல்

பில்கலெக்டர்களுக்கு பில்கள் வழங்கப்பட்டுள்ளது. இன்று 15.10.2025-ஆம் தேதி ரு.1,86,713-க்கு வரி வசூல் செய்யப்பட்டுள்ளதாக கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் காசாளரிடம் ரு.31,720/- மட்டுமே கையிருப்பு தொகை உள்ளதால், காசாளர் திருமதி.உமாவதி, மேலாளர் திரு.மீராமன்சூர் மற்றும் பில் கலெக்டர்கள் ஆகியோரால் ரு.1,54,993/- அரசுக்கு செலுத்த வேண்டிய வரித்தொகை கையாடல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்படி திடீர் சோதனை குழுவினர் 17.00 மணியளவில் மன்னார்குடி நகராட்சி அலுவலகத்தின் முதல் தளத்தில் இருந்த பொது பிரிவு அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டபோது ஆஜரில் இருந்தவர்கள் விவரம். 1. திரு.ஜா.மீராமன்சூர் வயது 58/2025 த/பெ ஜாபர், மேளாலர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 2. திரு.S.விஜயகுமார் வயது 56/2025, த/பெ சிங்காரவேலு, உதவி திட்ட அமைப்பாளர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 3. திருமதி.B.புனிதா வயது 41/2025, க/பெ பாலா, அலுவலக உதவியாளர் (தற்காலிகம்), நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 4. திருமதி.கீ.ஜெயலெட்சுமி வயது 47/2025, க/பெ ஜீவா, , பதிவறை எழுத்தர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 5. திரு.தெ.அரசுமணி, த/பெ தெட்சிணாமூர்த்தி, கணினி தட்டச்சர், தற்காலிகம், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 6. திருமதி. நா.பிரியதர்சினி, த/பெ நாகப்பன், தட்டச்சர், தற்காலிகம், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 7. திருமதி.ஜெயலெட்சுமி, வயது 55/2025, த/பெ மதியழகன், அலுவலக உதவியாளர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 8. திருமதி.வ.கோமதி, வயது 43/2025, க/பெ தமிழ்ச்செல்வன், உதவியாளர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 9. திருமதி.சத்யா, வயது 35/2025, க/பெ பாலமுருகன், கணினி தட்டச்சர், தற்காலிகம், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 10. திரு.முருகன், வயது 41/2025, த/பெ சக்கரபாணி, இளநிலை உதவியாளர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 11. திரு.R.மணிகண்ணன், வயது 33/2025, த/பெ ரெங்கநாதன், இளநிலை உதவியாளர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 12. திரு.கோபாலகிருஷ்ணன், வயது 49/2025, த/பெ வேணுகோபால், உதவி வருவாய் அலுவலர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 13. திரு.மாரிமுத்துராஜன் வயது /2025, த/பெ பிச்சையன், எண்.14 மேல வடம்போக்கி தெரு, மன்னார்குடி.(தனி நபர்) 14. திரு.R.கோவிந்தராஜ் வயது 62/2025, த/பெ ராஜமாணிக்கம், எண்.144 R.P.சிவம் நகர், மன்னார்குடி .(தனி நபர்) மன்னார்குடி நகராட்சி அலுவலகத்தின் மேற்படி முதல்தளத்தில் பொதுபிரிவில் இருந்த கீழ்கண்ட அலுவலர்களை சோதனை செய்த போது அவர்களிடம் இருந்த தொகை விபரம் கீழ்கண்டவாறு

| வ.எண். | பெயர் | ஆஜர்படுத்திய தொகை | திருப்பி அளிக்கப்பட்ட தொகை | கைப்பற்றப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1. | திரு.ஜா.மீராமன்சூர் த/பெ ஜாபர், | 33200 | 0 | 33200<br>500x66=33000<br>50x2=100 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | 20x4=80<br>10x2=20 |
| 2. | திரு.S.விஜயகுமார் த/பெ சிங்காரவேலு, | 4100 | 0 | 4100<br>500x8=4000<br>100x1=100 |
| 3. | திருமதி.B.புனிதா க/பெ பாலா, | 0 | 0 | 0 |
| 4. | திருமதி.கீ.ஜெயலெட்சுமி, க/பெ ஜீவா, | 0 | 0 | 0 |
| 5. | திரு.தெ.அரசுமணி, த/பெ தெட்சிணாமூர்த்தி, | 5300 | 0 | 5300<br>500x10=500<br>100x2=200<br>50x2=100 |
| 6. | திருமதி. நா.பிரியதர்சினி, த/பெ நாகப்பன், | 2100 | 2100 | 0 |
| 7. | திருமதி.ஜெயலெட்சுமி, த/பெ மதியழகன், | 1000 | 1000 | 0 |
| 8. | திருமதி.வ.கோமதி, க/பெ தமிழ்ச்செல்வன், | 500 | 500 | 0 |
| 9. | திருமதி.சத்யா, க/பெ பாலமுருகன், | 0 | 0 | 0 |
| 10. | திரு.முருகன், த/பெ சக்கரபாணி, | 2100 | 0 | 2100<br>500x2=1000<br>200x5=1000<br>50x2=100 |
| 11. | திரு.R.மணிகண்ணன், த/பெ ரெங்கநாதன், | 5000 | 0 | 5000<br>500x7=3500<br>100x13=1300<br>50x2=100<br>20x5=100 |
| 12. | திரு.கோபாலகிருஷ்ணன், த/பெ வேணுகோபால், | 1380 | 1380 | 0 |
| 13. | திரு.மாரிமுத்துராஜன் த/பெ பிச்சையன், | 48000 | | 48000<br>500x96=48000 |
| 14. | திரு.R.கோவிந்தராஜ் த/பெ ராஜமாணிக்கம் | 8100 | | 8100<br>500x13=6500<br>200x2=400<br>100x12=1200 |
| | | | | 105800 |

மேற்கண்ட அட்டவணையில் வ.எண்.1 நகராட்சி அலுவலக மேலாளர் திரு.மீராமன்சூர் அறையை சோதனை செய்தபோது அவர் அமர்ந்திருந்த மேஜையின் வலது பக்க டிராயரில் ரூ.30,000/- (500x60=30,000) இருந்தது, மேற்படி தொகை குறித்து விசாரிக்க, ஒய்வு பெற்ற Fountain Cleaner திரு.குமரேசன் தன்னிடம் ரூ.30,000/-ஐ கொடுத்து காசாளரிடம் கொடுக்க சொன்னதாக கூறினார். ஒய்வு பெற்ற Fountain Cleaner திரு.குமரேசனை விசாரிக்க மேலாளர் திரு.மீராமன்சூரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ரூ.30,000/- குறித்து தனக்கு எதுவும் தெரியாது எனவும், அந்த தொகையினை மேலாளரிடம் தான் கொடுக்கவில்லை என்றும், இன்று நகராட்சி அலுவலகத்தில் யாரிடமும் தொகை எதுவும் கொடுக்கவில்லை என்று தெரிவித்தார். மேலும் மேலாளரை சோதனை செய்ய மேல்சட்டையின் இடது பக்க மேல் பாக்கெட்டில் இருந்து ரூ.3,200/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விளக்கம் கேட்க, சரியான முகாந்திரம் கூறாததாலும், முன்னுக்குப்பின் முரணாக கூறியதால் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பொதுமக்களிடதிருந்து வசூல் செய்த கையூட்டு பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி ரூ.33,200/- மகஜரில் கைப்பற்றப்பட்டது. வரிசை எண்.2 திரு.விஜயகுமார், அலுவலக உதவியாளரை சோதனை செய்ய அவரது மேல்சட்டையில் இடது பக்க பாக்கெட்டிலிருந்து ரூ.4,100/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விளக்கம் கேட்க மருத்துவ செலவிற்காக எடுத்து வந்ததாக கூறினார். அவர் கூறியதற்கு சரியான முகாந்திரம் இல்லை என்பதால், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பொதுமக்களிடமிருந்து வசூல் செய்த கையூட்டு பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி ரூ.4,100/- மகஜரில் கைப்பற்றப்பட்டது. வரிசை எண்.3- திருமதி.B.புனிதா க/பெ பாலா, மற்றும் வ.எண்.4 திருமதி.கீ.ஜெயலெட்சுமி, க/பெ ஜீவா ஆகியோரை சோதனை செய்ய அவர்களிடமிருந்து பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. வ.எண்.5 - திரு.தெ.அரசுமணி, த/பெ தெட்சிணாமூர்த்தி என்பவரை சோதனை செய்ய அவரது மேல்சட்டையில் இடது பக்க பாக்கெட்டிலிருந்து ரூ.5,300/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விளக்கம் கேட்க குழு பணம் கட்டுவதற்கு எடுத்து வந்ததாக கூறினார். ஆனால் அதற்கான உரிய ஆவணங்கள் ஏதும் ஆஜர் படுத்தவில்லை. எனவே தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பொதுமக்களிடமிருந்து வசூல் செய்த கையூட்டு பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி ரூ.5,300/- மகஜரில் கைப்பற்றப்பட்டது. வ.எண்.6- திருமதி. நா.பிரியதர்சினி, த/பெ நாகப்பன், வ.எண்.7- திருமதி.ஜெயலெட்சுமி, த/பெ மதியழகன், வ.எண்.8 - திருமதி.வ.கோமதி, க/பெ தமிழ்ச்செல்வன் ஆகியோரை சோதனை செய்ய முறையே ரூ.2,100/-, ரூ.1000/-, ரூ.500/- ஆஜர் செய்தார்கள். இது குறித்து விளக்கம் கேட்க தனது சொந்த செலவிற்காக எடுத்து வந்த தொகை என்று தெரிவித்து சரியான முகாந்திரம் தெரிவித்ததால் மேற்படி தொகை அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. வ.எண்.9- திருமதி.சத்யா, க/பெ பாலமுருகன் என்பவரை சோதனை செய்ய தொகை எதுவும் கைப்பற்றப்படவில்லை. வ.எண்.10- திரு.முருகன், த/பெ சக்கரபாணி என்பவரை சோதனை செய்ய ரூ.2,100/- எடுத்து ஆஜர் செய்தார். அதுகுறித்து விளக்கம் கேட்க சரியான முகாந்திரம் கூறாததால் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பொதுமக்களிடமிருந்து வசூல் செய்த கையூட்டு பணம் என்ற

சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி ரூ.2,100/- மகஜரில் கைப்பற்றப்பட்டது. வ.எண்.11- திரு.R.மணிகண்ணன், த/பெ ரெங்கநாதன் என்பவரை சோதனை செய்ய ரூ.4,100/- எடுத்து ஆஜர் செய்தார் அதுகுறித்து விளக்கம் கேட்க மருத்துவ செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். அவருடைய விளக்கத்திற்கு சரியான முகாந்திரம் இல்லாததால் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பொதுமக்களிடமிருந்து வசூல் செய்த கையூட்டு பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி ரூ.4,100/- மகஜரில் கைப்பற்றப்பட்டது. வ.எண்.12- திரு.கோபாலகிருஷ்ணன், த/பெ வேணுகோபால் என்பவரை சோதனை செய்ய அவர் ரூ.1380/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து விசாரிக்க மருத்துவ செலவிற்காக எடுத்து வந்ததாக சரியான முகாந்திரம் தெரிவித்ததால் அந்த பணம் ரூ.1380/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. வ.எண்.13 திரு.மாரிமுத்துராஜன் (தனி நபர்) சோதனை செய்த போது, அவரது வலது பக்க உள்டிராபரில் இருந்து ரூ.21,000/-மும், இடது பக்க உள்டிராயரில் இருந்து ரூ.6,000/-மும், மேல் சட்டையில் இடது பக்க உள் பாக்கெட்டில் ரூ.20,000/-மும் அவர் அணிந்திருந்த பெல்டில் ரூ.1000/- எடுத்து ஆஜர் செய்தார், அந்த பணம் குறித்து விளக்கம் கேட்க தான் மோகன் கன்ஸ்ட்ரக்சனில் கணக்கர்/மேற்பார்வையாளராக இருந்து வருவதாகவும், இன்று மன்னார்குடி நகராட்சிக்கு பொறியாளரை பார்க்க வந்ததாக கூறினார். அவர் கூறிய விளக்கத்திற்கு உரிய முகாந்திரம் இல்லாததால் மேற்கண்ட கூடுதல் தொகை ரூ.48,000/- மகஜரில் கைப்பற்றப்பட்டது. வ.எண்.14 – திரு.கோவிந்தராஜனை (தனிநபர்) சோதனை செய்ய அவாது மேல் சட்டையின் இடது பக்க பாக்கெட்டிருந்து ரூ.8100/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து விளக்கம் கேட்க தான் ஏற்கனவே மன்னார்குடி நகராட்சியில் புதை சாக்கடை கிளீனராக பணிபுரிந்து கடந்த 2023ஆம் ஆண்டு ஓய்வு பெற்று விட்டதாகவும், மன்னார்குடி கடைகளில் சில கடைகளுக்கு Trade License புதுப்பிப்பது தொடர்பாக தான் பணம் வசூல் செய்து வந்து, நகராட்சியில் செலுத்த வந்ததாகவும் தெரிவித்தார். நகராட்சி மேலாளரின் உத்தரவின் பேரில் தான் மேற்கண்ட பணிகளை செய்து வருவதாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ள தக்கதாக இல்லாததால் மேற்படி தொகை ரூ.8100/- மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனை குழுவினர் 19.00 மணியளவில் மன்னார்குடி நகராட்சி அலுவலகத்தின் மெயின் பில்டிங் (Engineering Section) அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டபோது ஆஜரில் இருந்தவர்கள் விவரம். 1. திருமதி.விஜயலெட்சுமி வயது 58/2025, க/பெ பக்கிரிசாமி, வருவாய் உதவியாளர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 2. திருமதி.சுமதி வயது 46/2025, க/பெ பாலமுருகன், வருவாய் உதவியாளர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 3. திருமதி.பூங்கொடி வயது 46/2025, க/பெ சவரிமலை, கணிணி தட்டச்சர், தற்காலிகம், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி.4. செல்வி.கனிஷ்கா வயது 26/2025, த/பெ வேல்பாரி, பொது பணி மேற்பார்வையாளர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி.5. செல்வி.கனிமொழி வயது 28/2025, த/பெ செல்வராஜ், பணி ஆய்வாளர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 6. திரு.மணிஷ்குமார், வயது 25/2025, த/பெ பிரபாகர், நகரமைப்பு ஆய்வாளர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 7. திரு.அழகுராகுல் வயது 29/2025, த/பெ இளங்கோவன்,

வரைவாளர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 8. திரு.மணிகண்டன் வயது 31/2025, த/பெ கலியபெருமாள், அலுவலக உதவியாளர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 9. திரு.கார்த்திக் வயது 41/2025, த/பெ பாலு, அலுவலக உதவியாளர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 10. திரு.ருபன், வயது 29/2025, த/பெ பிரபாகர், பணி ஆய்வர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 11. திரு.ராஜ்குமார் வயது 36/2025, த/பெ கணேசன், தொழில் நுட்ப உதவியாளர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 12. திருமதி.ஜோதி வயது 46/2025, க/பெ அர்ஜுணன், உதவியாளர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 13. திருமதி.அகல்யா வயது 33/2025, த/பெ அன்பழகன், வருவாய் உதவியளார், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 14. திரு.பிரபாகரன் வயது 41/2025, த/பெ அமிர்தலிங்கம், அலுவலக வாகன ஓட்டுனர், தற்காலிகம், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. 15. திரு.கண்ணதாசன் வயது 52/2025, த/பெ இராஜரெத்தினம், நகரமைப்பு ஆய்வாளர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி. மன்னார்குடி நகராட்சி அலுவலகத்தின் மெயின் பில்டிங் (Engineering Section and Revenue Section) இருந்த கீழ்கண்ட அலுவலர்களை சோதனை செய்த போது அவர்களிடம் இருந்த தொகை விபரம் கீழ்கண்டவாறு

| வ.எண். | பெயர் | ஆஜர்படுத்திய தொகை | திருப்பி அளிக்கப்பட்ட தொகை | கைப்பற்றப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1. | திருமதி.விஜயலெட்சுமி க/பெ பக்கிரிசாமி, | 4100 | 0 | 4100<br>500x8=4000<br>100x1=100 |
| 2. | திருமதி.சுமதி க/பெ பாலமுருகன | 2200 | 0 | 2200<br>500x4=200<br>200x1=200 |
| 3. | திருமதி.பூங்கொடி க/பெ சவரிமலை, | 10000 | 0 | 10000<br>500x20=10000 |
| 4. | செல்வி.கனிஷ்கா த/பெ வேல்பாரி, | 1000 | 1000 | 0 |
| 5. | செல்வி.கனிமொழி த/பெ செல்வராஜ், | 0 | 0 | 0 |
| 6. | திரு.மணிஷ்குமார், த/பெ பிரபாகர், | 0 | 0 | 0 |
| 7. | திரு.அழகுராகுல் த/பெ இளங்கோவன | 0 | 0 | 0 |
| 8. | திரு.மணிகண்டன் த/பெ கலியபெருமாள் | 0 | 0 | 0 |
| 9. | திரு.கார்த்திக் த/பெ | 0 | 0 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| | பாலு | | | |
| 10. | திரு.ருபன், த/பெ பிரபாகர | 0 | 0 | 0 |
| 11. | திரு.ராஜ்குமார் த/பெ கணேசன், | 0 | 0 | 0 |
| 12. | திருமதி.ஜோதி க/பெ அர்ஜுனன், | 1600 | 1600 | 0 |
| 13. | திருமதி.அகல்யா த/பெ அன்பழகன், | 1365 | 1365 | 0 |
| 14. | திரு.பிரபாகரன் த/பெ அமிர்தலிங்கம், | 500 | 500 | 0 |
| 15. | திரு.கண்ணதாசன் த/பெ இராஜரெத்தினம், | 170 | 170 | 0 |
| | | | | 16300 |

மேற்கண்ட அட்டவணையில் வ.எண்.1 - திருமதி.விஜயலெட்சுமி க/பெ பக்கிரிசாமி என்பவரை சோதனை செய்ய ரூ. 4,100/- தனது பர்சிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து விளக்கம் கேட்க எல்.ஐ.சி. யில் பணம் கட்ட எடுத்து வந்ததாக கூறினார், அவர் கூறிய விளக்கத்திற்கு சரியான முகாந்திரம் இல்லாததால் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பொதுமக்களிடமிருந்து வசூல் செய்த கையூட்டு பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி ரூ.4,100/- மகஜரில் கைப்பற்றப்பட்டது. வ.எண்.2- திருமதி.சுமதி க/பெ பாலமுருகன் என்பவரை சோதனை செய்ய செல்லவரின் பின்புறமிருந்து ரூ.200/-, ஜாக்கெட்டின் உள்பகுதியிலிருந்து ரூ.2,000/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து விளக்கம் கேட்க, தனது மகளுக்கு தீபாவளி பணம் அனுப்ப எடுத்து வந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கத்திற்கு சரியான முகாந்திரம் இல்லாததால் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பொதுமக்களிடமிருந்து வசூல் செய்த கையூட்டு பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி ரூ.2,200/- மகஜரில் கைப்பற்றப்பட்டது. வ.எண்.3 திருமதி.பூங்கொடி க/பெ சவரிமலை என்பவரை சோதனை செய்ய அவருடைய மணிபர்சிலிருந்து ரூ.10,000/- எடுத்து ஆஜர் செய்தார், அந்த பணம் குறித்து விளக்கம் கேட்க அவர் குழுவிற்கு பணம் செலுத்துவதற்காக எடுத்து வந்ததாக கூறினார். அவர் கூறியதற்கு சரியான முகாந்திரம் இல்லாததால் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பொதுமக்களிடமிருந்து வசூல் செய்த கையூட்டு பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி ரூ.10,000/- மகஜரில் கைப்பற்றப்பட்டது. வ.எண். 4- கனிஷ்கா. வ.எண்.12. திருமதி.ஜோதி, வ.எண்.13 - திருமதி.அகல்யா, வ.எண்.14 - திரு.பிரபாகரன், வ.எண்.15. திரு.கண்ணதாசன் ஆகியோரை சோதனை செய்ய முறையே ரூ.1000/-, ரூ.1,600/-, ரூ.1365/-, ரூ.500/-. ரூ.170/- இருந்தது. அந்த பணம் குறித்து அவர்களிடம் விளக்கம் கேட்க சரியான விளக்கம் தெரிவித்ததால் அந்த தொகை அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. வ.எண். 5 முதல் 11 வரையிலானவர்களை சோதனை செய்ய தொகை ஏதும் கைப்பற்றப்படவில்லை.

நகராட்சி மேலாளர் திரு.மீராமன்சூர், பில்கலெக்டர்கள் திருமதி.அகல்யா, சுமதி, விஜயலெட்சுமி, காசாளர் திருமதி.உமாவதி, திரு.மாரித்துராஜன் (தனிநபர்), திரு.கோவிந்தராஜன் (தனிநபர்) ஆகியோருக்கு என்னால் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீர் சோதனை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்ட தொகையானது மன்னார்குடி நகராட்சி அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் அலுவலர்களால் மன்னார்குடி நகரத்தில் இயங்கிவரும் கடைகளிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வசூல் செய்த தொகை என தெரிய வந்துள்ளது. மேலும் மன்னார்குடி நகராட்சி பகுதிகளில் ஒப்பந்த பணிகளை செய்து வரும் ஒப்பந்ததாரர்களால் தீபாவளியை முன்னிட்டு தொகை வசூல் செய்து நகராட்சி அலுவலர்களுக்கு கொடுத்த வந்திருப்பதும் தெரிய வருகிறது. மேலும் கடைகளில் Trade License-ஐ புதுப்பிக்க முறையான அலுவலர்களை கொண்டு தொகையினை வசூல் செய்யாமல், ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கு எவ்வித பணி ஆணையும் வழங்காமல் வசூல் செய்ய மேலாளர் அனுமதித்திருப்பதும் தெரியவந்துள்ளது. மேலும் மன்னார்குடி நகராட்சியின் இன்றைய வரவு செலவு கணக்குகளை ஆய்வு செய்ததில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசூல் செய்யப்பட்ட வரித் தொகையினை அரசு கணக்கில் செலுத்தால் ரூ.1,54,993/- கையாடல் செய்யப்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளது. மேலும் திடீர் சோதனையின்போது கணக்கில் வராத ரூ. 1,31,500/- மகஜரில் கைப்பற்றப்பட்டது. வழக்கின் விசாரணைக்காக மன்னார்குடி நகராட்சியில் பராமரிக்கப்பட்ட 2025-26ஆம் ஆண்டிற்கான டெப்பாசிட் ரிஜிஸ்டர் கைப்பற்றப்பட்டது. அதில் 15.10.2025ஆம் தேதிக்கான வசூல் தொகை ரூ.1,86,713/- எனவும், இன்றையநாள் முடிவில் கையிருப்பு தொகை ரூ.31,720/- எனவும் நிதி இருப்பு குறைபாடு ரூ.1,54,993/- எனவும் எழுதப்பட்டு காசாளர், மேலாளர் ஆகியோரால் கையொப்பம் செய்துள்ளனர். 15.10.2025-ஆம் தேதி போடப்பட்ட பற்றுச்சீட்டுகள் 0246885 முதல் 0246940 வரையிலான பற்றுச்சீட்டுகளும் மன்னார்குடி நகராட்சியில் பராமரிக்கப்பட்ட செக் / டிடி Received Register- ம், வருகை பதிவேடும் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனை நடவடிக்கை 15.10.2025-ஆம் தேதி 23.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

இதன் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனு திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றை கனம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பியும் இதன் நகல்கள் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் நிலையக்கோப்பில் வைக்கப்பட்டது.

INSPECTOR OF POLICE,
VIGILANCE AND ANTI CORRUPTION,
THIRUVARUR.
16/10/25

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.04/2025 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம்-7-ன் விபரம். (C 8129867)

1. திரு.ஜா.மீராமன்சூர் வயது 58/2025 த/பெ ஜாபர், மேளாலர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி.
2. திருமதி.க.உமாவதி வயது 37/2025, க/பெ கமலநாதன், இளநிலை உதவியாளர், வரி வசூல் மையம், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி.
3. திரு.S.விஜயகுமார் வயது 56/2025, த/பெ சிங்காரவேலு, உதவி திட்ட அமைப்பாளர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி.
4. திரு.R.மணிகண்ணன், வயது 33/2025, த/பெ ரெங்கநாதன், இளநிலை உதவியாளர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி.
5. திருமதி.பூங்கொடி வயது 46/2025, க/பெ சவரிமலை, கணிணி தட்டச்சர், தற்காலிகம், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி.
6. திருமதி.விஜயலெட்சுமி வயது 58/2025, க/பெ பக்கிரிசாமி, வருவாய் உதவியாளர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி.
7. திருமதி.சுமதி வயது 46/2025, க/பெ பாலமுருகன், வருவாய் உதவியாளர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி.
8. திரு.முருகன், வயது 41/2025, த/பெ சக்கரபாணி, இளநிலை உதவியாளர், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி.
9. திரு.தெ.அரசுமணி, 35/25 த/பெ தெட்சிணாமூர்த்தி, கணிணி தட்டச்சர், தற்காலிகம், நகராட்சி அலுவலகம், மன்னார்குடி.
10. திரு.மாரிமுத்துராஜன் வயது 54/2025, த/பெ பிச்சையன், எண்.14 மேல வடம்போக்கி தெரு, மன்னார்குடி (தனி நபர்).
11. திரு.R.கோவிந்தராஜ் வயது 62/2025, த/பெ ராஜமாணிக்கம், எண்.144 R.P.சிவம் நகர், மன்னார்குடி (தனி நபர்).

INSPECTOR OF POLICE,
VIGILANCE AND ANTI CORRUPTION,
THIRUVARUR.
16/10/2025